பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

UTHAYAN

விலை ரூபா 3·50

சுடர்: 5 பிரமோதூத வூ ஐப்பசி மீ 20 உ செவ்வாய்க்கிழமை (06 - 11 - 1990) ஹிஜ்ரி 1410 ற. ஆகிர் 17 கதிர்: 244

# இந்திய ஆளும்கட்சியில் பிளவு
# வி.பி.சிங் பதவியிழப்பது உறுதி

## காங்கிரஸ் ஆதரவோடு சந்திரசேகர் பிரதமராவார்?

புதுடில்லி, நவ. 6

இந்தியாவில் சந்திரசேகர் தலைமையிலான ஜனதாதள் கட்சிப் பிரிவினர் இந்திரா காங்கிரஸ் கட்சியின் ஆதரவோடு புதிய அரசாங்கம் ஒன்றை அமைக்க வாய்ப்புகள் ஏற்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

ஜனதாதள் கட்சியின் தேவிலால் சார்பான போட்டிக் குழுவின் நாடாளுமன்றக் குழுத் தலைவராக சந்திரசேகர் நியமிக்கப்பட்டிருப்பதை இந்திரா காங்கிரஸ் வரவேற்றிருக்கிறது.

வி. பி. சிங் இல்லாத புதிய மாற்றுத் தலைமை ஒன்றின் கீழ் ஜனதாதள் கட்சி புதிய அரசு ஒன்றை அமைத்தால் அந்த அரசுக்கு இந்திரா காங்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## பிரதமராக சந்திரசேகர் முயற்சி

புதுடில்லி, நவம்பர். 6

இந்தியாவில் தேசிய முன்னணி அரசில் இடம்பெற்றிருக்கும் பிரதான கட்சியான ஜனதா தள் நேற்று இரண்டாகப் பிளவுண்டது.

இதனை அடுத்து தற்போது பதவியிலிருக்கும் பிரதமர் வி.பி. சிங், நாளை நாடாளுமன்றின் சிறப்புக் கூட்டத்தில் இடம்பெறும் நம்பிக்கை வாக்கெடுப்பில் தோல்வியுற்று பதவியிழப்பது உறுதியாகி இருப்பதாக அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டிருக்கின்றனர்.

பிரதமர் வி. பி. சிங் தலைமையில் ஒரு குழுவும், முன்னாள் துணைப் பிரதமர் தேவிலால் தலைமையில் ஒரு குழுவுமாக ஜனதாதள் பிளவுண்டது.

தேவிலால் கோஷ்டி எம்.பிக்களின் நாடாளுமன்றக் குழுத் தலைவராக நேற்றுத் தேர்ந்தெடுக்கப்பட்ட திரு சந்திரசேகர், தான் பிரதமராவதற்குப் பல கட்சிகளின் ஆதரவையும் திரட்டுவதில் நேற்று இரவுவரை மும்முரமாக ஈடுபட்டார்.

## வலி. வடக்கில் நேற்று பொம்மர்கள் குண்டு மாரி!

வலி. வடக்குப் பகுதியில் நேற்று பொம்மர்கள் அடுத்தடுத்து பலதடவைகள் குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்தின.

கட்டுவன், குரும்பசிட்டி, மாவிட்டபுரம், கீரிமலை ஆகிய பகுதிகளை நோக்கியே அதிகமான குண்டுகள் வீசப்பட்டன.

ஹெலியும் வட்டமிட்டு இப்பகுதிகளில் கலிபர் தாக்குதல்களை மேற்கொண்டது.

இராணுவத்தினர் கடுமையான ஷெல் தாக்குதல்களையும் நடத்தினர். (ஒ-68)

## ஊர்காவற்றுறை ராணுவம் நேற்று ஷெல், பீரங்கி தாக்கு

காரைநகர், நவ. 6

ஊர்காவற்றுறை இராணுவத்தினர் நேற்றுக் காலை சுமார் 8 மணியில் இருந்து 9. 30 மணிவரை குடியிருப்புப் பகுதிகளை நோக்கி சடும் ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டனர்.

களம்பன், வேலணைப் பகுதிகளில் ஷெல்கள் வீழ்ந்து வெடித்தன.

ஷெல் தாக்குதல்கள் நடந்துகொண்டிருந்த அதே சமயம் கடலில் இருந்து பீரங்கித் தாக்குதலும் நடத்தப்பட்டது.

சேத விவரங்கள் குறித்து தகவல் ஏதும் கிடைக்கவில்லை.

இதேவேளை —

நேற்றிரவும் ஊர்காவற்றுறைப் பகுதியில் குண்டுச் சத்தங்கள் கேட்டன. (ஒ-6)

## களுவாஞ்சிக்குடியில் உளவாளிக்கு தண்டனை

யாழ்ப்பாணம். நவ. 6

நேற்று முன்தினம் இரவு 7-45 மணியளவில் களுவாஞ்சிக்குடி இராணுவ முகாமுக்கு இருநூறு யார் தூரத்தில் வைத்து உளவாளி ஒருவருக்கு தங்களால் மரணதண்டனை வழங்கப்பட்டதாக விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன.

குருமண் வெளியைச் சேர்ந்த கமலநாதன் (வயது 30) என்ற இந்த உளவாளி தமது இயக்க உறுப்பினர்களின் பெயர், விவரங்கள் மற்றும் தங்கும் வீடுகள் பற்றிய வரைபடங்கள் ஆகியவற்றுடன் கைது செய்யப்பட்டதாகவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன. (உ)

## நிவாரணம் தாமதமாகும்

யாழ்ப்பாணம், நவ. 6

இடம்பெயர்ந்தோருக்கான 4 ஆம் கட்ட நிவாரணமும், தொழில், வருமானம் இழந்தோருக்கான 3 ஆம் கட்ட நிவாரணமும் தாமதமாகவே வழங்கப்பட இருக்கின்றன.

மற்றுமொரு கப்பல் வந்த பின்பே பொருள்கள் விநியோகம் மேற்கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

நிவாரணம் வழங்கும் திகதி குறித்து ஆராய்வதற்கு நேற்று செயலகத்தில் கூட்டம் ஒன்று நடைபெற்றது.

அங்கு உணவுப் பொருள்களின் பற்றாக்குறை பற்றி

[4 ஆம் பக்கம் பார்க்க]

## 'ராகிங்' செய்வது முற்றாகத் தடை; கண்காணிக்க பலருக்கு அதிகாரம்

யாழ்ப்பாணம். நவ. 6

புதிய மாணவர்களை ''ராகிங்'' செய்வது தடை செய்யப்பட்டுள்ளதாகவும் —

அவர்களைத் துன்புறுத்துவதற்கு ஒழுங்கு செய்பவர்களுக்கும், துன்புறுத்தல் செய்வோருக்கும் கடும் தண்டனை விதிக்கப்படும் என்றும் —

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உப வேந்தர் திரு. அ. துரைராஜா அறிவித்துள்ளார்.

புதிய மாணவர் இன்று தொடக்கம் விரிவுரைகளுக்குச் சமுகம் கொடுக்க இருப்பதை ஒட்டியே அவர் இவ்வாறு அறிவித்துள்ளார்.

''ராகிங்'' உட்பட்ட ஒழுங்கு முறையின்மை, தகாத நடத்தை முதலியவற்றைக் கண்காணித்து நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் பல்கலைக் கழகத்தின் ஆசிரியர்கள், துணைவேந்தரால் அதிகாரம் அளிக்கப்பட்ட சிரேஷ்ட மாணவ ஆலோசகர், மாணவ ஆலோசகர்கள், மார்ஷல் ஆகியோருக்கு வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன் அத்தகைய நிகழ்வுகளை உபவேந்தரின் கவனத்துக்குக் கொண்டுவந்து ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளும் பொறுப்பும் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை —

பல்கலைக்கழகத்துக்குள்ளே அல்லது வெளியே எந்த ஒரு மாணவரையோ வேறு ஒருவரையோ எந்தவிதமான துன்புறுத்தல்களுக்கும் உட்படுத்தல் ஆகாது. குறிப்பாக புதிய எந்த ஒரு மாணவரோ உளவியல் ரீதியாகவோ உடலியல் ரீதியாகவோ பாதிப்பு

[4 ஆம் பக்கம் பார்க்க]

## ஊர்காவற் படையினருக்கு இராணுவத்தில் இடம்!

கொழும்பு, நவ. 6

ஊர்காவற் படையில் உள்ளவர்கள், படிப்படியாக இராணுவத்தில் சேர்க்கப்படுவர்.

இத்தகவலை பாதுகாப்புத் துணை அமைச்சர் திரு ரஞ்சன் விஜேரத்தினா தெரிவித்தார்.

துணை அமைச்சர் கடந்த ஞாயிற்றுக்கிழமை அனுராதபுர மாவட்டத்தில் உள்ள இராணுவ முகாம்களுக்கும் இராணுவ ஆஸ்பத்திரிக்கும் விஜயம் செய்தார்.

ஹொரவப் பொத்தானை இராணுவ முகாமுக்கு விஜயம் செய்து, அங்கு கூடியிருந்த - புதிதாகச் சேர்க்கப்பட்ட - ஊர்காவற் படையினர் மத்தியில் பேசுகையில் -

ஊர்காவல் படையில் உள்ளவர்கள், திறமை, சேவை மூப்பு அடிப்படையில் இராணுவத்தில் சேர்க்கப்படுவர் - என்று துணை அமைச்சர் சொன்னார். (அ)

## பல்கலைக்கழகம் ஆரம்பம்

யாழ்ப்பாணம், நவ. 6

யாழ். பல்கலைக்கழகத்தின் சகல பீடங்களும் நேற்று மீண்டும் இயங்கத் தொடங்கின.

மாணவர்கள் அதிகளவில் வருகை தந்திருந்தனர்.

முதலாம் வருட மாணவர்களுக்கான விரிவுரைகள் இன்று செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-6)

## கப்பலில் வரும் பொருள்களை இறக்குவதில் பெரும் சிரமம்

யாழ்ப்பாணம், நவ. 6

பலத்த காற்றமுக்கமும், கொந்தளிப்பும் இருப்பதால். பருத்தித்துறை துறைமுகத்தில் கப்பலில் இருந்து பொருள்களை இறக்கமுடியாதுள்ளது.

இத்தகவலை உணவுத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பருத்தித்துறையில் சமயம் தரித்து தற் ''லங்காசிறி'' நிற்கும் கப்பலில் இருந்து பொ[illegible]ருள்கள் இறக்கப்பட்டு வரு[illegible]கின்றன.

கப்பலில் இருந்து பொருள்களைத் துறைக்குக் கொ[illegible] வரும் இழுவைப்பட[illegible]ண்டு காற்றமுக்கத்தா[illegible] (பாஜ்) அலைகளாலு[illegible]யும், பெரும் ஈடுபட மு[illegible] சேவையில் இ[illegible]டியாதுள்ளது.

இ[illegible]னால் பொருள்களை இறக்குவது தாமதமாவதாகவும், சிலவேளை அவற்றை இறக்கமுடியாத அசாத்திய நிலை ஏற்படக்கூடும் என்றும் அவர் தெரிவித்தார்.

பருத்தித்துறையில் இந்

[4 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ★ சின்னஞ்சிறு விளம்பரம் ★

## விற்பனைக்கு

நத்தார், புதுவருட வாழ்த்துக்களை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். (வியாபாரிகளுக்கு விஷேட கழிவுண்டு) ''மண்டேலா ரேடர்'' இல. 256A, பருத்தித்துறை வீதி, நல்லூர் யாழ்ப்பாணம். [14550]

## அல்டி (ALDI)

சகலவிதமான மணிக்கூடுகள் திருத்துவதற்கும் கைக் கடிகாரங்கள், சுவர் மணிக்கூடுகள், மணிக்கூடு பற்றறிகள், நியாய விலையில் பெற்றுக் கொள்வதற்கும் இன்றே விஜயம் செய்யுங்கள் அல்டி 269/1 மின் சாரநிலையவீதி, யாழ்ப்பாணம். முன்பு எம்மிடம் மணிக்கூடு திருத்த தந்தவர்கள் 10 ம் திகதிக்கு முன் பெற்றுக் கொள்ளவும். (சி/5364)

## வைத்திய சேவை

Dr. C. C. S. ராஜன் கிருஷ்ணா வைத்திய நிலையம், மார்க்கட் சந்தி, நாவந்துறைக்கு மாற்றப்பட்டுள்ளது. (14638)

## விதைநெல் விற்பனைக்கு

சீனட்டி சிங்கப்பூர் சிங்காரி B G 34-6 Bw 351, Bw 500 இனங்கள் கையிரிப்பில் உண்டு L பொக் முறையில் நெல் நாற்றுக்கள் ஓடருக்கு தயார் செய்து கொடுக்கப்படும். S. T. K. இந்திரன் ஆறுமுக லேன், கல்வியன் காடு. நல்லூர். (14636)

## அஷ்டலக்ஷ்மி 1991

அஷ்டலக்ஷ்மி தினத்தாள் கலண்டர் No. 1 ஸ்பெசல் விலை ரூபா. 47/50 குறைந்தளவு கலண்டர்களை வெளியிட்டுள்ளதால் வாங்க முந்துங்கள் மொத்த வியாபாரம் இல்லை. அஷ்டலக்ஷ்மி வெளியீட்டகம், கைதடி. [14630]

## இராசா டீசல் என்ஜினியேர்ஸ்

திங்கட்கிழமை 5 - 11 - 90 முதல் பழைய இடமாகிய 180, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணத்தில் மீண்டும் சேவையை ஆரம்பிக்கின்றது என்பதை அறியத் தருகின்றோம். (14625)

## கிளீன் கட் போட்டோஸ்ரற்

தெளிவான போட்டோஸ்ரற் பிரதிகளை உடனடியாகப் பெற்றுக் கொள்ளவும் அடையாள அட்டைகட்கு கவரிட்டுக் கொள்ளவும் கிளீன் கட் 37, சிவகுருநாதர் வீதி, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் யாழ். இந்து மகளிர் சந்திக்கு அண்மையில். (சி-5355)

## டில்கா வாச் வேக்ஸ் [Dilka Watch Works]

வாடிக்கையாளரின் வசதிக்கமைய எமது ஸ்தாபனம் மானிப்பாய் வீதி ஆனைக் கோட்டையிலும் 3, சித்தன் கேணி வீதி, பண்டத்தரிப்பிலும் இயங்குகின்றது. சகல மணிக்கூடுகளும், றேடியோக்களும் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும். சகலஎலக்ரோனிக் கடிகாரங்களின் பற்றறிகளும் விற்பனைக்கு உண்டு. (14613)

## தவறிவிட்டது

எனது பெறுமதி வாய்ந்த கைக்கடிகாரம் ஒன்று 03-11-90 காலை 9 மணியளவில் விளையாட்டு அரங்கு வீதிக்கும் கோவில் வீதிக்கும் இடையில் தவறிவிட்டது. எடுத்தவர்கள் 148/1 ஸ்ரான்லி கன்ரீன் ஸ்ரான்லி வீதியில் ஒப்படைக்கவும் சன்மானம் வழங்கப்படும். (14637)

## தவறிவிட்டது

சிவப்பிரகாசம் பஞ்சலிங்கம் இல. 23099024 V உடைய அடையாள அட்டை சென்ற மாதம் 29 ஆம் திகதி கோப்பாய் பழம் றோட் கிராம சேவையாளர் அலுவலகத்திற்கும் கல்வியங்காடு சந்தைக்கும் இடையில் தவறிவிட்டது. எடுத்தவர்கள் கோப்பாய் தெற்கு கிராமசேவையாளரிடம் ஒப்படைக்கவும். (14634)

# போரை ஆரம்பிக்க ஆணை கேட்கிறது அமெரிக்கா!

வாஷிங்டன், நவ. 6 ஈராக்மீது போர் தொடுக்க நேசநாடுகளிடம் அமெரிக்கா ஆணை பெற இருக்கிறது.

அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜேம்ஸ் பேக்கர் இவ்வாறு தெரிவித்தார்.

இதேசமயம்—

ஐ நா. பாதுகாப்புச்சபையின் அமெரிக்கா தவிர்ந்த நான்கு நிரந்தர உறுப்பு நாடுகளான சீனா, ரஷ்யா, பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களைச் சந்தித்துப் பேசுவதற்கான சுற்றுப்பயணம் ஒன்றை ஜேம்ஸ் பேக்கர் ஆரம்பித்தார். (உ-எ)

## தஞ்சம்

1979 முதல் 1989 ஆம் வரையான பத்து ஆண்டுகாலத்தில் 51 இலங்கையருக்கு மட்டுமே பிரிட்டிஷ் அரசு அரசியல் தஞ்சம் வழங்கியது என்று அறிவிக்கப்படுகிறது.

அக்காலத்தில் அசிரயல் தஞ்சம் கோரி விண்ணப்பித்த இலங்கையரின் எண்ணிக்கை 5 ஆயிரத்து 910 என்று பிரிட்டிஷ் குடியகல்வு - குடிவரவு திணைக்கள அறிக்கை ஒன்று தெரிவித்துள்ளது. [இ-எ)

# 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு: 09 - 04 - 1959

இறையடி: 09 - 11 - 1987

சதுர்த்தித் திதி: 06 - 11 - 1990

## தம்பிப்பிள்ளை சிவநாதன்

என் அன்புத் தெய்வமே ஆண்மையின் சிகரமே பாசத்தின் உறைவிடமே பண்பின் ஒளி விளக்கே ஆண்டு மூன்றாகியும் நீங்கள் எம்மோடு வாழ்ந்த நாட்கள் எம் நெஞ்சத்தை விட்டகலாதையா.

உங்கள் ஆத்மா சாந்தியடைய என்றும் இறைவனை வேண்டுகிறோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, மகன், பெற்றோர், உறவினர்

சோமசுந்தரம் வீதி.
ஆனைக்கோட்டை. [14553]

# A/L விஞ்ஞான மாணவர் கவனத்திற்கு

# இடமாற்றம்

## "A" LEVEL CENTRE

3ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்; மணல்தரை லேன், சுந்தர்மடம் ஆகிய இரு இடங்களிலும் இயங்கி வந்தஎமது கல்வி நிறுவனத்தை,

பருத்தித்துறை வீதி, 1ஆம் ஒழுங்கைக்கு மாற்றியுள்ளோம். (Mack Travels அருகாமையில்)

எதிர்வரும் புதன்கிழமை 07 - 11 - 1990 அன்று 90 ம், 91 ம், 92 ஆம் ஆண்டு பிரிவுகளைச் சேர்ந்த எமது மாணவர்களை முறையே பிற்பகல் 1.30 p m, 2.00 p m, 2.30 p m அளவில் சந்தித்து மேலும் வகுப்புக்கள் ஆரம்பம் பற்றி முழு விபரங்களையும் பெற்றுக்கொள்ளவும்.

- நிர்வாகம்.

(சி-5374)

# அந்தியேட்டி தினம்

மலர்வு: 06 | 07 | 1952



உதிர்வு: 09 | 08 | 1990

அமரர்

## திரு. சோ. யோகேஸ்வரன்

வாடாத நல்லறிவும் தெவிட்டாத பேரன்பும்
தளராத உறுதியும் குன்றாத இளமையும்
அணையாத ஆர்வமும் இணையில்லா அடக்கமும்
கருவில் திருவாய்ப் பெற்ற
எங்கள் குடும்பத்தலைவரே!
மணமலரே! மணியொளியே! எங்களுடன்
தெய்வமாய் வாழ்ந்தீர்! இன்று தெய்வீகமானீர்!
என்றும் எங்கள் இதயமலரில்
ஒளிவீசிக்கொண்டே இருப்பீர்!
அவ்வொளியில் நாங்கள் என்றும்
வாழ்ந்து கொண்டே இருப்போம்.

உமது பிரிவால் துயருறும்:
திருமதி யோ. இராசேஸ்வரி,
புதல்வர் யோ. கோகுலன்,
யோ. இரகுவன்,
செல்வி யோ. வாசினி.

நவக்கிரி,
புத்தூர். [14278]

# மாவீரர் தின ஏற்பாடுகள்

கோப்பாய், நவ. 6 மாவீரர் தினத்தையொட்டி கோப்பாய்ச் சந்தி, இருபாலைச் சந்திகளில் தூபி அமைக்கும் வேலைகள் இடம் பெற்று வருகின்றன. [இ-72]

# 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
## தம்பாபிள்ளை சோமசுந்தரம்

ஆண்டவன் படைப்பு: 01 - 05 - 1932

அந்நியர் அழிப்பு: 09 - 11 - 1987

திதி: 06-11-1990

மூன்றாண்டுகள் சென்றும்
இன்றும் நீங்கவில்லை
எம் துயரலைகள்
ஆவி விடுத்துப் போன
பின்பும் நாம் ஆயிரமாய்
கலங்குகின்றோம்
எம் குடும்பத்தின் ஒளி
விளக்காய் இருந்து
வழி காட்டுங்கள்.

உங்கள் பிரிவால்துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமகன்,
பேரப்பிள்ளைகள்.

சுதுமலை தெற்கு,
மானிப்பாய். [14272]

# மரண அறிவித்தல்கள்

## கதிரவேலு கதிரமலையான்

மாவிட்டபுரத்தைச் சேர்ந்த கதிரவேலு கதிரமலையான் 20-10-90 இல் அகால மரணமானார்.

இவர் காலஞ்சென்ற கதிரவேலுவின் மகனும், பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், கதிரவேலின் தகப்பனாரும், திருமதி நவநீதகுணரத்ன பூசனி அம்மா நடராசாவின் தம்பியாருமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் 21-10-90 அன்று அவரது இல்லத்தில் நடைபெற்றது.

தகவல்:
வே. பாலசிங்கம்.

கேணிக்கரை வைரவர் கோவிலடி,
அளவெட்டி. [14642]

## திருமதி தம்பு அன்னலட்சுமி

பன்னாலை தெல்லிப்பளையைச் சேர்ந்த திருமதி தம்பு அன்னலட்சுமி 03 - 11 - 90 சனிக்கிழமை அன்று காலமானார். இவர் காலம் சென்ற திரு. தம்பு (இளைப்பாறிய ஆசிரியர் மகாஜனாக் கல்லூரி) அவர்களின் அன்பு மனைவியும், காலம் சென்ற வைத்தீஸ்வரன் கனகம்மா, இரத்தினவேல் றோகிணி அம்மான், (கனிஷ்ட அதிபர் மகாஜனக் கல்லூரி) ஆகியோரின் அருமைத் தாயாரும், காலம் சென்ற தெ. மு. செ. வைத்தீஸ்வரன், க. இரத்தினவேல் (இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தர்) ஆகியோரின் மாமியும், ரஞ்சன் (கனடா), குணாளன் (கிராம சேவையாளர் வித்தகபுரம்), தயாளன் (லண்டன்), ப. வை. ஜெயபாலன் (கிளிநொச்சி), டாக்டர் ராஜ கௌரி (டெல்கி), ராஜவேல், ராஜயோகன் ஆகியோரின் பேத்தியும் ஆவார்.

அன்னாரின் ஈமச்சடங்குகள் 03-11-90 அன்று நடைபெற்றது. இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
திருமதி இரத்தினவேல் றோகினி அம்மான்,
திரு. வை. குணாளன்.

உப தபாற் கந்தோர் வளவு,
வன்னியசிங்கம் வீதி,
தெல்லிப்பளை. [14641]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## மலையகத்தில் விஷக் கயிறு!

இந்தியக் கடவுச்சீட்டுப் பெற்ற மலையகத் தமிழர்கள் இந்தியா சென்றுவிட வேண்டும் என்ற விஷமத்தனம் மீண்டும் முளைவிட்டிருக்கிறது. அட்டன் பகுதித் தோட்டங்களில், அறிவித்தல் பலகைகளில், சம்பந்தப்பட்டோர் மலையகத்தை-இலங்கையை- விட்டு வெளியேறுவதற்கு இரண்டு வாரக் காலக்கெடு விதிக்கும் அறிவிப்புகள் ஒட்டப்பட்டிருந்தன.

மலையகத் தமிழர் குடியுரிமை குறித்துச் செய்யப்பட்ட இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் கீழ், இந்தியக் குடியுரிமைக்கு விண்ணப்பித்துக் கடவுச்சீட்டுப் பெற்றவர்கள் அங்கு அனுப்பப்பட வேண்டும் என்ற விஷத்தை முதலில் விதைத்தவர் அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா தான் இவ்வருட முற்பகுதியில் அந்த விஷக்கயிற்றைச் சுழற்றிப் பெரும் அமர்க்களம் புரிந்தார். அவர்!

இம் முறை தாம் நேரடியாகக் கயிற்றைப் பிடிக்காமல், வேறு ஏதாவது ஓர் இயக்கத்திடம் கொடுத்திருக்கக் கூடும்! எது எப்படியாயினும், குடியுரிமை ஒப்பந்தத்தின் கீழ் இந்தியக் கடவுச்சீட்டுப் பெற்றவர்களின் விவகாரம் ஒரு தீர்க்கப்படாத பிரச்சினையாகத் தொடரப்போகிறது என்பதை அனுமானிக்க முடிகிறது.

1987 ஆம் ஆண்டின் ராஜீவ்-ஜே. ஆர். ஒப்பந்தத்தைப் போலவே, மலையகத் தமிழர் குடியுரிமை தொடர்பான ஒப்பந்தங்களும் சம்பந்தப்பட்ட மக்களின் விருப்பத்துக்கு மாறாக இரு நாட்டு அரசுகளும் சேர்ந்து பலவந்தமாகத் திணித்தவை. அதனால் இலங்கையையே தமது நாடாக்கி வாழவேண்டும் என்று நினைத்த பலரும், உள்ளார்ந்த மனவிருப்பமின்றி. வேறு மார்க்கம் இல்லாததால் இந்தியக் குடியுரிமைக்கு விண்ணப்பித்தனர்.

மலையகத் தமிழர் பிரச்சினை ஓர் இன மக்கள் சம்பந்தப்பட்டது என்பதை மறந்து, சற்றும் மனிதாபிமான அணுகுமுறை இல்லாது, அதனைக் கையாள இலங்கை முயல்கிறது. ஒப்பந்தங்களின் கீழ் இந்தியக் குடியுரிமைக்கு விண்ணப்பித்தவர்களை எப்பாடுபட்டும் அங்கு அனுப்பிவிட வேண்டும் என்று அழுங்குப் பிடி பிடிக்கிறது.

இந்நாட்டிற்கு உழைத்துக் கொடுத்தவர்களின் உரிமைகளைப் பறித்தெடுக்க இலங்கை அரசு முயல்கிறது. இதனை உணர்ந்து மலையகத் தமிழர்களை வர்த்தகப் பொருள்களாக்க இனியும் இந்தியா இடம் கொடுத்தல் ஆகாது.

மலையகத் தமிழர்களும் இதுவிடயத்தில் மிக விழிப்பாக இருந்து போராட்டங்களை முன்னெடுக்க வேண்டும். தங்களில் எவர் ஒருவரும் விடுபடாமல், இலங்கைக் குடியுரிமை பெற வேண்டும் என்ற இலட்சியத்துடன் திட்டமிட்ட போராட்டத்தை உடனடியாக ஆரம்பிக்க வேண்டும். அவர்களின் போராட்டம் அரசை நிச்சயம் அசைய வைக்கும்.

# இடம் பெயர்ந்த இடங்களிலேயே தற்காலிகமாக வேலை வழங்குக!

### கிழக்கு மாகாண அரச ஊழியர் கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ. 6

யாழ் மாவட்டத்துக்கு இடம் பெயர்ந்துள்ள கிழக்கு மாகாண அரசாங்க திணைக்கள கூட்டுத்தாபன உத்தியோகத்தர்கள் அவர்கள் இடம் பெயர்ந்துள்ள பகுதியிலேயே வேலை செய்ய அனுமதிக்கப்பட வேண்டும். இது சாத்தியப்படாவிடில் ஊழியர்களுக்கு விசேஷ விடுமுறையுடன் கூடிய முழுச் சம்பளம் வழங்கப்பட வேண்டும்.

நல்லூர்ச் சாதனா பாடசாலையில் நேற்று முன்தினம் நடைபெற்ற கிழக்குமாகாண இடம் பெயர்ந்த ஊழியர் சங்கக் கூட்டத்தில் மேற்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இது தொடர்பான மகஜர் ஒன்றும் அரசாங்கத்துக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட மற்றும் மூன்று கோரிக்கைகள் வருமாறு:

★ யாழ் அரச அதிபர், அரசாங்கம் மூலம் உள்ளூராட்சி திணைக்களம் மூலமாக விசேட நிதியை ஒதுக்கி வேலை செய்யும் ஊழியர்களுக்கு சம்பளம் வழங்க வேண்டும்.

★ தொலைத் தொடர்பு, போக்குவரத்து என்பவற்றை யாழ்ப்பாணத்துக்கும்-கிழக்கு மாகாணத்துக்கும் இடையில் மீள ஏற்படுத்தல் வேண்டும்.

★ மேலே கூறப்பட்டவை பூர்த்தியாக்கப்பட்டு ஊழியர் உயிர், உடமை பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டு, பாதுகாப்புடன் ஊழியர்கள் வேலைக்குத் திரும்ப ஏற்பாடு செய்யப்படவேண்டும். [இ - 6]

## குறுகியகால பாடத்திட்ட கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், நவ. 6

குறுகிய காலப்பாடத் திட்டக் கருத்தரங்கு தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நாளை 7ஆம் திகதி புதன்கிழமை காலை 9.00 மணிக்கு கல்வித் திணைக்களத்தில் நடைபெற உள்ளது.

இதில் விஞ்ஞான, கணித ஆசிரிய ஆலோசகர்களைக் கலந்து கொள்ளுமாறு விஞ்ஞானக் கல்வி அதிகாரி திரு வி. சுந்தரலிங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளார். [இ]

## கட்டுமரத்தில் உணவுப் பொருள்

தென்மராட்சி, நவ 6

ஆனையிறவு கொம்படி வெளியில் மழை வெள்ளம் தேங்கி நிற்பதால் வவுனியாவில் இருந்து கண்டாவளைக்கு கொண்டு வரப்படும் உணவுப் பொருள்கள் கட்டுமரங்கள் மூலம் ஏற்றி இறக்கப்படுகின்றன.

கேரதீவுப் பாதையால் போக்குவரத்துச் செய்வதில் உள்ள சிரமங்களால் பல சைக்கிள் வியாபாரிகள் மீண்டும் கொம்படி வெளிப்பாதையூடாக தமது தொழிலை ஆரம்பித்துள்ளனர். (இ- 117)

## தொழில்நுட்ப பாட விசேட சேவை காலப் பயிற்சி

### நாளை முதல் ஆரம்பம்

யாழ்ப்பாணம், நவ. 6

தொழில்நுட்பப் பாடங்களுக்கான விசேஷ சேவை காலப் பயிற்சி வகுப்புகள் நாளை 7ஆம் திகதி முதல் 10 ஆம் திகதி வரை காலை 9 00 மணிக்கு நடைபெறுகின்றன.

நாளை 7ஆம் திகதி யாழ். இந்து மகளிர் கல்லூரியில் விவசாயமும் சாவகச்சேரி மகளிர் மகாவித்தியாலயத்தில் விவசாய, மனையியல் வனைதல், நெசவு ஆகியவையும்—

8 ஆம் திகதி சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரியில் விவசாயமும் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தில் மனையியல், நெசவு, வனைதல், மோட்டார் பொறித் தொழில், வானொலிபேணல் ஆகியவையும்—

9 ஆம் திகதி வேலணை சேர் வைத்தியலிங்கம் துரைசாமி மத்திய மகாவித்தியாலயத்தில் விவசாயம், மனையியல், நெசவு ஆகியவையும் சுழிபுரம் விக்டோறியாக் கல்லூரியின் நெசவு, வனைதல். ஆகியவையும்—

10ஆம் திகதி அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயத்தில் விவசாயம், மனையியல், வனைதல் ஆகியவையும்—

இராமநாதன் கல்லூரியில் விவசாயம், மனையியல் ஆகியவையும் இடம்பெறும்.

இவற்றில் ஆசிரியர்களை தவறாது கலந்து கொள்ளுமாறு தொழில் நுட்ப முறைசாராக் கல்விப் பிரிவு அதிகாரி திரு. ச. சுப்பிரமணியம் வேண்டுகோள் விடுத்துள்ளார். [இ]

## ஆசியாவின் பலம் வாய்ந்த வங்கிகளாக இலங்கையிலிருந்து 2 தெரிவு!

யாழ்ப்பாணம், நவ. 6

ஆசியாவின் மிகச் சிறந்த- பலம் வாய்ந்த - இருபத்தைந்து வங்கிகளில், இலங்கையில் உள்ள இரண்டு வங்கிகளும் இடம் பிடித்துள்ளன.

''ஏசியன் பிஸ்னஸ்'' என்ற பிரபல சஞ்சிகையும் மூலதன தகவற் சேவையும் சேர்ந்து நடத்திய கணக்கெடுப்பின் பிரகாரம் ஆசிய நாடுகளில் உள்ள பலம் வாய்ந்த 25 வங்கிகளும், பலம் குறைந்த 25 வங்கிகளும் இனம் காணப்பட்டுள்ளன.

மிகப் பலம் வாய்ந்த வங்கிகளாக இலங்கையில் உள்ள ''செய்லான்'' வங்கியும், இலங்கை வர்த்தக (கொமேர்சல்) வங்கியும் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

ஜப்பான், பிலிப்பைன்ஸ் ஆகிய இரண்டு நாடுகளையும் தவிர்த்து ஏனைய சகல ஆசிய நாடுகளிலும் இயங்கும் வங்கிகள் மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

கொங்ஹொங்-9, சிங்கப்பூர்-4, இந்தோனேஷியா-3, தென்கொரியா-3, இலங்கை-2, சீனா-2, தைவான்-1, தாய்லாந்து-1, என்ற கணக்கில் பலம் வாய்ந்த வங்கிகள் அட்டவணைப்படுத்தப் பட்டுள்ளன.

ஆசியாவைச்சேர்ந்த வங்கிகளின் மூலதனத் தகைமை விகிதாசாரத்தை அடிப்படையாகக் கொண்டு பலம் வாய்ந்த வங்கிகள் தெரிவு செய்யப்பட்டது - இதுவே முதற்தடவை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையிலிருந்து தெரிவு செய்யப்பட்ட ''செய்லான்'' வங்கியின் மூ. த. விகிதாசாரம் 14.73 ஆகவும் இலங்கை வர்த்தக (கொமேர்சல்) வங்கியின் மூ. த. விகிதாசாரம் 8 91 ஆகவும் கணக்கிடப் பட்டுள்ளது. [அ]

## அருமைநாயகம் நினைவஞ்சலிக் கூட்டம்

யாழ்ப்பாணம், நவ. 6

ஈழத்துப் பிரபல நாடக நடிகரில் ஒருவரும் திரைப்பட இயக்குநருமான கலைஞர் எஸ். அருமைநாயகத்தின் (நவாலி) நினைவஞ்சலிக் கூட்டம் நல்லூர் கம்பன் கோட்டத்தில் நடைபெற்றது.

அகில இலங்கைக் கம்பன் கழகத் தலைவர் திரு. தி. திருநந்தகுமார் தலைமையில் இடம்பெற்ற இந்த கூட்டத்தில் கலை, இலக்கிய அறிஞர்கள் பலரும் அஞ்சலி உரை நிகழ்த்தினார்கள். (இ-6)

## சங்குவேலியில் உலர் உணவு

யாழ்ப்பாணம், நவ. 6

சங்குவேலி கிராம சேவையாளர் பிரிவில் மூன்றாம் கட்ட உலர் உணவு விநியோகத்துக்கான புதிய நடைமுறையை அமுலாக்குவதற்கான துரித ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

கிராம சேவையாளர் திரு. ஞா. பெனடிக் ஜெயரத்தினத்துடன் சிற்றூரவை உறுப்பினர்களும் இணைந்து ஒத்துழைப்பு வழங்கி வருகின்றனர்.

புதிய நடைமுறையால் பாவனையாளர்கள் [illegible]மின்றி ப. நோ. கூ. [illegible]ருந்து பொருள்களை பெற்றுக்கொள்ள முடியும். (இ-6)

## கிளிநொச்சி ஆலயப் பகுதியில் குண்டு வீச்சு! மூவர் காயம்!!

கிளிநொச்சி, நவ. 6

கிளிநொச்சி ஆலயத்தில் ஞாயிறு ஆராதனை நடைபெற்றுக் கொண்டிருந்த சமயம் ஆலயப்பகுதியில் பொம்மர்கள் தாக்குதல் நடத்தின. ஆராதனையில் கலந்து கொண்டிருந்தவர்களில் மூவர் காயம் அடைந்தனர்.

செல்வச்சந்திரன் (வயது 20) பிரேமச்சந்திரன் (வயது 18) திருமதி தியாகராஜா (வயது 42) ஆகியோரே காயம் அடைந்தவர்கள் ஆவர்.

ஆலயப் பகுதியில் வீசப்பட்ட மற்றும் ஒரு குண்டு வெடிக்கவில்லை என்று தெரிவிக்கப் படுகிறது.

கிளிநொச்சி டிப்போச் சந்திப் பகுதியில் இடம் பெற்ற குண்டு வீச்சில் பட்டியில் கட்டப்பட்டிருந்த மாடுகள் இறந்தன.

நீண்ட இடைவெளிக்குப் பின்னர் இடம்பெற்ற இந்த குண்டு வீச்சால் மக்கள் பெரும் பதற்றம் அடைந்தனர். சிலர் பாதுகாப்பான இடங்களுக்கு இடம் பெயர்ந்தனர் (இ - 76)

## காப்புறுதி வேலைகள்

யாழ்ப்பாணம், நவ. 6

காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் யாழ். பிராந்திய அலுவலகம் மிக விரைவில் பொதுமக்களுக்கு உரிய காப்புறுதிவேலைகளைத் தொடங்கும்.

பிராந்திய முகாமையாளர் திரு. கே. அப்புத்துரை மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

கடந்த மாதம் பத்தாம் திகதி தொடக்கம் பிரஸ்தாப அலுவலகத்தில் உள்ளக வேலைகள் நடைபெற்று வருகின்றன என்றும்-

அலுவலகத்தை மூடுவது சம்பந்தமாக இதுவரை எவ்வித முடிவும் மேற் கொள்ளப் படவில்லை என்றும்-அவர் மேலும் தெரிவித்துள்ளார். [அ]

# 1987 முதல் தென்னிலங்கையில் 60,000 பேரைக் காணோம்!

### ஐரோப்பிய நாடாளுமன்றத்தில் அறிக்கை

கொழும்பு, நவ. 6

இலங்கையின் தென்பகுதியில் 1987 ஆம் ஆண்டில் இருந்து இதுவரை சுமார் அறுபதினாயிரம் பேர் காணாமற் போய்விட்டனர்.

இப்படிஐரோப்பிய நாடாளுமன்றக் குழு ஒன்று குற்றஞ் சாட்டி உள்ளது.

இக்குழுவின் சார்பில் அதன் பெண் பேச்சாளர் இத் தகவலை வெளியிட்டார்.

இந்த ஐரோப்பிய நாடாளுமன்றக் குழுவில் இரண்டு பிரிட்டிஷ் உறுப்பினர்களும் பெல்ஜியம், நெதர்லாந்து, ஆகிய நாடுகளைச் சேர்ந்த இரண்டு வழக்கறிஞர்களும் அங்கம் வகிக்கின்றனர்.

இலங்கை அரசின் ஆயுதப் படையினரும் அவர்களின் மறைமுக ஆதரவுடன் செயல்படுத்தப்பட்டு வரும் ஆயுத பாணிகளான கண்காணிப்புக் குழுக்களுமே பெரும் எண்ணிக்கையில் பொதுமக்கள் காணாமற் போனதுக்குக் காரணம் என்றும் இக் குழு கூறியிருக்கிறது.

இக் குற்றச்சாட்டுக்களை இலங்கை ஆயுதப் படையினரும் அரச அதிகாரிகளும் மறுத்துள்ள போதிலும், அவர்களால் அக் குற்றச் சாட்டுக்களில் இருந்து தங்களை விடுவிக்க முடியாதிருப்பதாகவும் ஐரோப்பிய நாடாளுமன்றக் குழு தெரிவித்துள்ளது.

அதே சமயம் தென் இலங்கையில் இடம்பெறும் மனித உரிமை மீறல்கள் பற்றி ஐரோப்பிய நாடாளுமன்றத் தூதுக்குழு தயாரித்துள்ள அறிக்கை இன்று செவ்வாய்க்கிழமை ஐரோப்பிய நாடாளுமன்றக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படவிருக்கிறது.

இலங்கையில் ஒருவாரம் தங்கி இருந்து, காணாமற் போனவர்கள் பற்றிய முறைப்பாடுகளை விசாரணை செய்து இந்தக் குழுவினர் தங்கள் அறிக்கையைத் தயார் செய்துள்ளனர். (இ-எ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பிரதமர் சிங், தேவிலால் தனித் தனியே கூட்டம்

புதுடில்லி, நவ. 6
பிரதமர் வி. பி. சிங் தலைமையில் நேற்றுக்காலை நடைபெற்ற ஜனதா தள் எம்.பிக்கள் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 83 பேர் பங்குபற்றினார்கள். அவர்கள் பிரதமர் வி. பி. சிங்கின் தலைமைக்கு விசுவாசம் தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றினார்கள்.

இதேசமயம்—

பிரதமர் சிங் பதவி விலக வேண்டும் என்று கோரும் ஜனதா தள் எம். பிக்கள், திரு. தேவிலாலின் தலைமையில் அவரது இல்லத்தில் கூடி, திரு. சந்திரசேகரை கட்சித் தலைவராகத் தெரிவு செய்தனர்.

ஜனதா தள் கட்சியின் 68 எம். பிக்களின் ஆதரவு திரு. சந்திரசேகருக்கு இருப்பதாக திரு. தேவிலால் அறிவித்தார்.

ஆனால்—

ஜனதா தள் கட்சியின் எம். பிக்களின் மொத்த எண்ணிக்கை 140 ஆகும். வி. பி. சிங் பிரிவு, தேவிலால் பிரிவு இரண்டிலும் சில எம். பிக்களின் பெயர்கள் பொதுவாக இடம் பெற்றிருந்ததாக புதுடில்லி வட்டாரங்கள் தெரிவித்தன.

இதனிடையில்—

இந்தியாவில் புதிய அரசு ஒன்றை அமைப்பதற்குத் தேவையான ஆதரவு சந்திரசேகர் தலைமைக்குக் கிடைத்திருப்பதாக தேவிலால் சொன்னார்.

திரு. சந்திரசேகர் தலைமையை ஆதரிக்கும்படி பிரதமர் சிங்கின் ஆதரவாளர்களான ஜனதா தள் எம்.பிக்களுக்கு வேண்டுகோளும் விடுக்கப்பட்டுள்ளது. (உ-எ)

## கண்டனம்

புதுடில்லி, நவ. 6
ஜனதாதள் கட்சியில் இருந்து சந்திரசேகர் தலைமையில் ஒரு பிரிவினர் பிரிந்து சென்றதை இடதுசாரிக்கட்சிகள் கண்டித்துள்ளன. [ஓ-எ]

# சந்திரசேகர் குழுவினர் கட்சியிலிருந்து நீக்கம்

## வி. பி. சிங் நேற்று அறிவிப்பு

திரு. சந்திரசேகர் மற்றும் 24 எம். பிக்கள் ஜனதாதள் கட்சியில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

ஜனதாதள் தலைவரும் பிரதமருமான திரு. வி. பி. சிங் இதுதொடர்பான உத்தரவு பிறப்பித்துள்ளதாக நேற்று அறிவிக்கப்பட்டது.

ஐந்து ராஜ்யசபை எம். பிக்களும் ஜனதாதள்ளில்இருந்து வெளியேற்றப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டு உள்ளது. (உ-எ)

# புதிய அரசு அமைக்க சந்திரசேகரை அழைக்குக!

## தேவிலால் குழு கோரிக்கை

புதிய அரசாங்கம் ஒன்றை அமைக்க திரு. சந்திரசேகரை அழைக்கும்படி ஜனதாதள் கட்சியின் தேவிலால் பிரிவு ஜனாதிபதி வெங்கட்ராமனைக் கேட்டிருக்கிறது.

இதேசமயம் —

ஜனதாதள் நாடாளுமன்றக் குழுவின் தலைவர் பதவியிலிருந்து பிரதமர் வி. பி. சிங் நீக்கப்பட்டு அந்த இடத்துக்குச் சந்திரசேகர் நியமிக்கப்பட்டிருப்பதாக தேவிலால் அறிவித்தார்.

குழுவின் தலைவராக திரு. சந்திரசேகரே செயற்படுவார் என்றும் அவர் சொன்னார்.

திரு சந்திரசேகரின் தலைமையில் உள்ள கட்சியே உண்மையான ஜனதாதள் கட்சி என்றும் திரு. தேவிலால் வர்ணித்தார். (உ-எ)

# மரண அறிவித்தல்

## திருமதி இராசநாயகம் நாகம்மா

காங்கேசன்துறை குருவீதியைச் சேர்ந்த ஓய்வு பெற்ற ஆசிரியை திருமதி இராசநாயகம் நாகம்மா அவர்கள் 4 - 11 - 90 இல் இறைபதம் எய்தினார். அன்னார் வறுத்தலைவிளானைப் பிறப்பிடமாகக் கொண்ட காலஞ்சென்ற ஆசிரியர் அப்பாப்பிள்ளை இராசநாயகத்தின் அன்பு மனைவியும், கலாநிதி இராஜேந்திரன் (அவுஸ்திரேலியா), பொறியியலாளர் சிவசேயன் [சிங்கப்பூர்] ஆகியோரின் அன்புத் தாயாரும், சாந்தி, திருமகள் ஆகியோரின் அன்பு மாமியாரும், சங்கீதா, சாகித்தியன், சஜன் ஆகியோரின் அருமைப்பாட்டியும், பொன்னம்மா, கனகம்மா, நடராஜா, சபாபதிப்பிள்ளை, சரஸ்வதி, விசாலாட்சி, காலஞ்சென்ற பாக்கியவதி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் திங்கட்கிழமை 5- 11- 90 சிறப்பர் இல்லம், முகாந்திரம் ஒழுங்கை மல்லாகத்தில் நடைபெற்று, பூதவுடல் மல்லாகம் நீதிமன்ற வீதியிலுள்ள மயானத்தில் தகனம் செய்யப்பட்டது என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றேன்.

தகவல்:
V. K. நடராஜா.

குரு வீதி,
காங்கேசன்துறை

[14645]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 06 - 11 - 1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# தர்மப் பணம் பெறும் ஏழைகளுக்கு ஐந்து மாதங்களாக எதுவுமில்லை!

## கொழும்பிலிருந்து வரவேண்டுமாம்

யாழ்ப்பாணம், நவ. 6
மாதாந்த பொதுசன உதவிப் பணம் [தர்மப் பணம்] பெறுவோருக்கு கடந்த ஐந்து மாதங்களாக அது வழங்கப்படவில்லை.

இதனால் பல ஏழை மக்கள் அரை வயிற்றுக் கஞ்சியும் குடிக்க முடியாமல் கஷ்டப்படுவதாகச் சம்பந்தப்பட்டவர்கள் உதயனிடம் கவலைதெரிவித்தனர்.

இது குறித்து செயலக வட்டாரங்களில் கேட்டபோது, கொழும்பில் இருந்து பணம் வந்தால் மட்டுமே பொதுசன உதவிப் பணத்தை வழங்கமுடியும் என்று தெரிவிக்கப்பட்டது.

யாழ். மாவட்டத்தில்பொதுசன உதவிப் பணத்தை வழங்குவதற்கு மாதாந்தம் 19 லட்சம் ரூபா தேவை என்றும் -

இப்போது கொழும்பு சென்றிருக்கும் அரச அதிபர் பணத்தைக் கொண்டுவர முயற்சிக்கிறார் என்றும் -

அது கைகூடினால் மட்டுமே உதவிப் பணத்தை வழங்க முடியும் என்றும் - அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

### நோயாளர் பணம் கிடைக்கும்

இதேவேளை - புற்றுநோய், காசநோய், தொழுநோய் ஆகியவற்றால் பீடிக்கப்பட்டவர்களுக்குசமூக சேவைப் பகுதி வழங்கும் மாதாந்த உதவித் தொகை உதவி அரசாங்க அதிபர்களுக்கு காசாக நேற்று வழங்கப்பட்டது. ஜூன், ஜூலை மாதங்களுக்குரிய பணமே வழங்கப்பட்டது.

வழமையாக தபாலகங்கள் மூலம் வழங்கப்படும் இந்தக் கொடுப்பனவு இந்த முறை உதவி அரசாங்க அதிபர்கள் ஊடாக வழங்க ஏற்பாடாகி உள்ளது. (அ-3)

## மாணவர் வரவு அதிகரிப்பு

யாழ்ப்பாணம், நவ. 6
குடா நாட்டில் உள்ள பாடசாலைகளில் நேற்று மாணவர்கள் வரவு அதிகரித்துக் காணப்பட்டது.

நகரிலுள்ள பாடசாலைகளிலும் வழமையை விட மாணவர் வரவு உயர்ந்திருந்தது. (ஓ 3-6)

## சாவகச்சேரியில்

தென்மராட்சி, நவ. 6
தென்மராட்சி மாணவர் இயக்கத்தின் ''போர் மண்ணில் புனிதத் தாய்'' என்னும் நாடகம் இன்று பிற்பகல் 2-00 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் மேடையேற்றப் படவுள்ளது. (ஓ-117)

## சங்கீத, நடன ஆசிரியர் கூட்டம்

யாழ்ப்பாணம், நவ. 6
திருமலை ஸ்ரீ சண்முக வித்தியாலயத்தில், கல்வி அமைச்சால் நடத்தப்பட்ட அழகியற் கல்வி [சங்கீதம், நடனம்] பயிற்சி வகுப்பில் கலந்து கொண்ட, யாழ். மாவட்ட ஆசிரிய ஆலோசகர்களுக்கான விசேட கூட்டம் ஒன்று நாளை புதன்கிழமை காலை 9-00 மணிக்கு யாழ் இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது. [ஓ-88]

## மீண்டும் பழைய இடத்தில் கச்சேரி

கிளிநொச்சி, நவ. 6
கிளிநொச்சிக் கச்சேரி எதிர்வரும் 7 ஆம் திகதி புதன்கிழமை தொடக்கம் மீண்டும் பழைய இடத்தில் இயங்க உள்ளது.

தற்போது ஜெயந்தி நகரில் உள்ள ஓர் தனியார் வீட்டில் கச்சேரி இயங்கி வருகிறது.

பழைய கச்சேரி கட்டடம் பொம்மர் தாக்குதல் காரணமாக சேதம் அடைந்திருந்தது தற்போது அது திருத்தி அமைக்கப்பட்டுள்ளது. (இ-76)

## காணாமற் போனவர் பற்றி புகார்

ஆறு மாதங்களுக்கு முன் அக்கரைப்பற்றுக்கு சென்ற இளைஞர் ஒருவரைப் பற்றி இது வரை தகவல் எதுவும் இல்லை.

இது குறித்து பெற்றோர் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவிடம் முறையிட்டுள்ளனர்.

வடமராட்சியைச் சேர்ந்த பத்மநாதன் மகேஸ்வரன் [illegible] [இ-15]

# வவுனியா, மன்னாருக்கு பிரேமா நேற்று விஜயம்

கொழும்பு, நவ. 6
ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாச, அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னவுடன் நேற்று வவுனியா, மன்னார், கற்பிட்டி, புத்தளம் பகுதிகளுக்கு விஜயம் செய்தார்.

வவுனியாவில் படை அதிகாரிகளுடன் திரு. பிரேமதாச கலந்துரையாடினார்.

கலந்துரையாடலில் அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ரணதுங்க, துணை அமைச்சர் ராஜமனோகரி புலேந்திரன், இராணுவத் தளபதி ஹமில்டன் வணசிங்க, அத்தியாவசிய சேவைகள் நாயகம் சரித்த ரத்வத்த ஆகியோரும் பங்கு பற்றினர்.

மன்னாரில் சில பகுதிகளைப் பார்வையிட்ட ஜனாதிபதி, தள்ளாடி இராணுவ முகாமுக்கும் சென்றார்.

கற்பிட்டி, புத்தளம் பகுதிகளுக்கு விஜயம் செய்த திரு. பிரேமதாச, முஸ்லிம் அகதிகளைச் சந்தித்துப் பேசினார்.

# நெடுங்கேணிக்குளத்தில் சிப்பாய்கள் கால் இழப்பு

யாழ்ப்பாணம், நவ. 6
திருகோணமலை மாவட்டம் நெடுங்கேணிக்குளம் பகுதியில் கடந்த சனியன்று இடம்பெற்ற மோதல்களின் போது விடுதலைப் புலிகள் வைத்த மிதிவெடிகளில் சிக்கி பல சிப்பாய்கள் கால்களை இழந்தனர்.

லெப்டினன்ட் கனகு, இலட்சுமணன், கணேஷ் ஆகிய மூன்று போராளிகள் வீர மரணமடைந்தனர்.

விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் இத்தகவலை வெளியிட்டன.

வேப்பங்குளம், இறக்கக்கண்டி, வில்கம் விகாரை, நிலாவெளி ஆகிய பகுதிகளில் இருந்து வெளியேறி நெடுங்கேணிக்குளம் காட்டுப் பகுதிக்கு முன்னேற முற்பட்ட படையினரை விடுதலைப் புலிகள் வழிமறித்துத் தாக்கி பின்வாங்கச் செய்ததாகவும் அவ் வட்டாரங்கள் தெரிவித்தன. (உ)

## கப்பலில்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]
நிலை தொடருமானால் கப்பலில் இருந்து பொருள்களை இறக்குவதற்கு மாற்று ஒழுங்கு செய்யவேண்டிவரும் என்றும் அவர் தெரிவித்தார். (அ-3)

## நிவாரணம்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
ஆராயப்பட்டது.

நாளை மறுதினம் புதன்கிழமை கூடி இது குறித்து மேலும் ஆராய்வதென நேற்று முடிவு செய்யப்பட்டது.

இதேவேளை —

4 ஆம் கட்ட நிவாரணத்துக்கான பெர்மிட் வழங்கும் வேலைகளை எதிர்வரும் வெள்ளிக்கிழமைக்குள் முடிக்க வேண்டும் என்று உதவி அரச அதிபர்கள் பணிக்கப்பட்டுள்ளனர். (ஓ-3)

## ராகிங்....

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]
அடையும் வகையில் துன்புறுத்தப்படுவதை பல்கலைக்கழகம் முற்றாகத் தடைசெய்கின்றது மாணவர் ஒருவர் பல்கலைக்கழக விரிவுரைகள், கட்டுரை வகுப்புக்கள் முதலியவற்றிற்கு புதிய மாணவர்கள் செல்வதற்குத் தடையாகவோ அவற்றிற்கு இடையூறாகவோ நடந்துகொள்ளக் கூடாது — என்றும் உபவேந்தர் மாணவர்களுக்கு வழங்கிய அறிவுறுத்தல் ஒன்றில் தெரிவித்துள்ளார். (அ 6)

## நாட்டின் வாக்காளர் எண்ணிக்கை

கொழும்பு, நவ. 6
நாட்டில் ஒரு கோடியே ஒரு லட்சத்து 39 ஆயிரத்து 607 பேர் வாக்களிக்கும் தகைமை பெற்றிருக்கின்றனர் என்று தேர்தல் திணைக்கள வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது. (இ-எ)

## காங்கிரஸ்....

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]
கிரஸ் முழு ஆதரவு வழங்கும் என்றும் இந்திரா காங்கிரஸ் நேற்று அறிவித்தது.

அதனை அடுத்தே சந்திரசேகர் தலைமையில் புதிய அரசு அமைக்க வாய்ப்பு ஏற்பட்டிருப்பதாகக் கூறப்பட்டது.

ஆனாலும்—

ஜனதா தளத்தில் முழு எம். பிக்களும் சந்திரசேகரை ஆதரித்தாலும் அவர்களின் எண்ணிக்கையிலும் பார்க்க நாடாளுமன்றத்தில் இந்திரா காங்கிரஸ் எம். பிக்களின் எண்ணிக்கை 30 வீதத்திலும் அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது.

இதனிடையில்—

சந்திரசேகர் இன்று காலை இந்திரா காங்கிரஸ் தலைவரும் முன்னாள் பிரதமருமான ராஜீவ் காந்தியைச் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தவிருக்கிறார் என அறிவிக்கப்பட்டது. (உ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org